# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 230/2012

வா.சா.1- குறுக்கு விசாரணை - நாள் **01-03-2024.**
பெயர் = சுமதி வா.சா.-1
வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.-

(1) நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் பள்ளி ஆசிரியையாக வேலை பார்க்கிறேன் என்கிறார் சாட்சி. வாதிகள் அனைவரும் சேர்ந்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என்னைத் தவிர மற்ற 3 வாதிகள் சாட்சிகள் சொல்ல வருவார்களா? என்றால் வருவார்கள் என்கிறார் சாட்சி. 1ம் வாதி மலைச்சாமி, 3ம் வாதி பாலு, 4ம் வாதி காளிமுத்து ஆகியோர் வாகைக்குளம் கிராமத்தின் பிரதிநிதிகள் அல்ல என்றும், இந்த வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை என்றும் கூறி எனது வழக்கறிஞருக்கு கடிதம் எழுதியுள்ளார்கள் என்றும், அந்த கடிதத்தின் நகலை நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்துள்ளார்கள் என்றும் சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை என்கிறார் சாட்சி.

(2) தாவாச் சொத்து தெரு என்று கூறித்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவாச் சொத்தில் வாகைக்குளம் பஞ்சாயத்திலிருந்து சாக்கடை வாய்க்கால் போட்டுள்ளார்களா? என்றால் இல்லை. தாவாச் சொத்தில் மின்கம்பங்கள், தெருவிளக்குகள் போடப்பட்டுள்ளதா? என்றால் இல்லை. என்னுடைய இடததில் என் வீட்டிற்கு மின் இணைப்பை கொண்டுசெல்வதற்காக மின் கம்பம் போட்டுள்ளேன் என்கிறார் சாட்சி. எனது வீட்டிலிருந்து தாவாச் சொத்தில் நடந்து புழங்கி வருகிறேன் என்றால் சரிதான். தாவா பாதையில் நான் நடக்கக்கூடாது என்று யாரும் சொன்னார்களா? என்றால் ஜெயராணி வகையறா சொன்னார்கள் என்கிறார் சாட்சி.

(3) தாவாச் சொத்துக்கு மேற்கே யார் இடம் என்றால் காளிமுத்து இடம் என்று சாட்சி சொல்கிறார். என்வீடடிலிருந்து தாவாச் சொத்து வழியாக மேற்கு நோக்கி சென்று மேற்கே உள்ள மெயின்ரோட்டுக்கு செல்லலாம் என்றால் நடந்து செல்லலாம் என்கிறார் சாட்சி. நான் 1999ல் எனதுசொத்தை 3ம் பிரதிவாதி ஜெயராணியிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்கிறார் சாட்சி. நான் கிரையம் வாங்குபோது காலியிடமாகத்தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான்கிரையம் வாங்கி எததனை வருடம் கழித்து வீடு கட்டினேன்

என்றால் மறுவருடமே கட்டிவீட்டேன். கிழமேல் எத்தனை அடி, தென்வடல் எத்தனை அடி கிரையம் வாங்கினேன் என்றால் அடி அளவுகள் ஞாபகமில்லை என்கிறார் சாட்சி. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு மேற்கே புலியுடையார் தேவர் கொல்லை நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புலியுடையார் தேவரின் மருமகன்தான் 4ம் வாதி காளிமுத்து என்கிறார் சாட்சி. புலியுடையார் தேவர் இடத்திற்கும் மேற்கே மெயின்ரோடு உள்ளது என்றால் சரிதான்.

(4) நான் கிரையம் வாங்கிய சொத்துக்கு தெற்கே கதிர்வேல் சேர்வை வீடு மற்றும் கொல்லையிடம் உள்ளது. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு கிழக்கே ஜெயராணி, முத்துவழிவிட்டான் தேவர் ஆகியோருக்கு பாத்தியமான காலிமனை உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு கிழக்கே உள்ள வீடு இடிந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீடுதான் ஊருக்கு மேற்கே உள்ள கடைசி வீடு என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள பகுதியில் என்னுடைய வீடுதவிர மற்ற வீடுகள் பிரதிவாதிகள் வகையறா வீடுகள் என்றால் சரிதான். நானும் பிரதிவாதிகள் வகையறாவிடம் காலியிடத்தை கிரையம் வாங்கி வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

(5) என்னுடைய கிரைய பத்திரத்தில் என் கைவசம் உள்ள நிலததிற்கும் கிழமேல் பாதைக்கும் தெற்கு என்று எல்கைமால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் பாதையின் அடி அளவுகள் குறிப்பிட்டு எனக்கு கிரையம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். கிழமேல் பாதைக்கு வடக்கே உள்ள சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகள் வகையறாவின் சொத்துக்கள் என்றால் சரிதான். நான் கிழமேலாக 42 அடிகள் , தென்வடலாக 44 அடி கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அளவுகளுக்குள் நான் வீடு கட்டிவிட்டேன் என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் படிக்கட்டுகள் மெயின் சுவரிலிருந்து பாதையில் 3 அடி நீட்டிக்கொண்டு உள்ளது என்றால் சரியல்ல, என்னுடைய இடத்திற்குள்தான் படிக்கட்டுகள் கட்டியுள்ளேன் என்கிறார் சாட்சி. படிக்கட்டுகளை பாதையில் கட்டியுள்ளேனா? அல்லது என்னுடைய இடத்திற்குள் கட்டியுள்ளேனா என்றால் என்னுடைய இடத்திற்குள்தான் கட்டியுள்ளேன் என்கிறார் சாட்சி.

(6) கிழக்கு பக்கமும், மேற்கு பக்கமும் ஏறி எனது வீட்டிற்குள் ஏறி செல்லும் வகையில் முக்கோண வடிவில் படிக்கட்டுகள் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கறிஞர்/ஆணையர் என்னுடைய வீட்டின் தென்வடல் அளவை 44 அடி என அளவீடு செய்து காட்டியுள்ளார் என்றால் அவர் சரியாக அளக்கவில்லை என்கிறார் சாட்சி. என்னுடைய வீட்டின்

படிக்கட்டுகளை பாதையில்தான் கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஜெயராணி எனக்கு கிரையம் கொடுத்த சொத்து ஜெயராணிக்கு எப்படி பாத்தியம் என்றால் அவர் கிரையம் வாங்கிய சொத்து என்கிறார் சாட்சி. நத்தம் சர்வே எங்கள் ஊரில் எப்போது நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஜெயராணி எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஜெயராணி கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் பாதை காட்டப்பட்டுள்ளதா? என்பதை விசாரித்து தெரிந்து கொண்டு கிரையம் வாங்கினேனா என்றால் அதை நான் விசாரிக்காமல்தான் கிரையம் வாங்கினேன் என்கிறார் சாட்சி. நான் கிரையம் வாங்குவதற்கு 20 வருடங்களுக்கு முன்பே ஜெயராணி அவரது சொத்தை கிரையம் வாங்கிவிட்டார் என்றால் வாங்கியிருக்கலாம் என்கிறார் சாட்சி.

(7) ஜெயராணி கிரையம் வாங்கிய சொத்தின் ஒரு பகுதியைத்தான் அவரிடமிருந்து நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். ஜெயராணி கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தில் எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் எனது கணவர் பார்த்திருப்பார் என்கிறார் சாட்சி. அரசாங்கம் சர்வே செய்தபோது தாவாச் சொத்தை பாதை என்று வகைப்பாடு செய்திருப்பதால்தான் தாவாச் சொத்தை நான் தெரு என்று சொல்கிறோனா என்றால் இல்லை, எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்கிறார் சாட்சி. எனக்கு தெரு வேண்டுமா? பாதை வேண்டுமா? என்றால் தெருதான் வேண்டும். என்னுடைய பத்திரத்தில் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தாவாச் சொத்து தெரு என்று நான் உரிமை கோர முடியும் என்று கேட்டால், பாதையும், தெருவும் ஒன்றுதான் என்கிறார் சாட்சி.

(8) தாவாச் சொத்திற்கு கிழமேல் எத்தனை அடி, தென்வடல் எத்தனை அடி கோருகிறேன் என்றால் அடி அளவுகள் தெரியாது, அடி அளவு தெரியாது என்றும் கார் போகும் அளவிற்கு உரிமை கோருகிறேன் என்றும் சாட்சி சொல்கிறார். தாவாச் சொத்து தெரு என்பதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. அரசாங்க ஆவணமும், எனது பத்திரமும் உள்ளது என்று சாட்சி சொல்கிறார். நான் அரசாங்க ஆவணத்தை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேனா? அல்லது எனது பத்திரத்தை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இரண்டையும் வைத்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்கிறார் சாட்சி. நான் எனது கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது கிரையபத்திரத்தை வைத்து தாவாச் சொத்திற்கு உரிமை

கோரியிருந்தால் எனது கிரைய பத்திரத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும், வருவாய் ஆவணங்களின் அடிப்படையில்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், சர்வே ஆவணங்களின் அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் இரண்டின் அடிப்படையிலும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்கிறார் சாட்சி.

(9) சர்வே ஆவணங்களின் அடிப்படையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் தாவாச் சொத்தை பொறுத்து உரிமைகோரி இந்த வழக்கை நாங்கள் நான் தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது பத்திரத்தில் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் சர்வேப்படி தாவாச் சொத்து தெரு என உரிமைகோர எனக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நடைபாதை உரிமைதான் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு கிரைய பாத்தியப்பட்ட இடத்தை அரசாங்கம் சர்வேயின்போது தவறுதலாக தெரு என்று வகைப்பாடு செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் அரசாங்கத்தை தரப்பனராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

(10) தாவாச் சொத்தில் பிரதிவாதிகள் வகையறா பாத்ரூம் கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீட்டு கழிவு நீர் இறங்குவதற்கு தாவாச் சொத்தில் உறை அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கே உள்ள மெயின்ரோட்டிலிருந்து எனது வீடுவரை தெரு உள்ளது. மேற்கே உள்ள மெயின்ரோட்டிலிருந்து கிழக்கே உள்ள தென்வடல் பாதைவரை அந்த தெரு செல்கிறதா? என்றால் ஆமாம். அதற்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அரசு ஆவணங்களில் எனது வீடுவரைதான் தெரு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு மேற்கே உள்ள இடங்கள் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு இடங்கள் என்றும் எனவே அரசாங்கத்தை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. அரியநாச்சி அம்மன் கோவில் எங்கள் ஊரில் உள்ளது என்றால் சரிதான், அரியநாச்சியம்மன் கோவிலில் பிரதிவாதிகள் வகையறாவிற்கு மேற்படி கோவில் திருவிழாவின்போது 3ம் கர மரியாதை கொடுப்பார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது என்கிறார் சாட்சி.

(11) தாவாச் சொத்தில் கல்தூணை பிரதிவாதிகள் போட்டிருந்ததாக நான் எனது வழக்கில் சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் வழக்கறிஞர்/

ஆணையர் தாவாச் சொத்தில் கல்தூண் இருந்தாக தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் இருந்ததாக சொல்லவிலலை என்றால் முதலில் போடடிருந்தார்கள், பின்பு எடுத்துவிட்டார்கள் என்கிறார் சாட்சி. அதேபோல் தாவாச்சொததில் பிரதிவாதிகள் பொட்டிகடை வைத்திருந்தார்கள் பின்பு அதை எடுத்துவிட்டார்கள் என்கிறார் சாட்சி. தாவா சொத்தில் ஊராட்சியிலிருந்து போடப்பட்ட குடிநீர் பைப்புகள் உள்ளதா? என்றால் உள்ளது. நதிமன்ற ஆணையர் தனதுஅறிக்கையில், தாவாச் சொத்தில் குடிநீர் பைப்புகள் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் முதலில் குடிநீர் பைப்புகள் போட்டிருந்தார்கள் என்றும், அதை எடுத்துவிட்டார்கள் என்றும் சாட்சி சொல்கிறார். வழக்கறிஞர்/ஆணையர் தாவாச் சொத்தைப் பார்வையிடும்போது குடிநீர் பைப்பை எடுத்துவிட்டார்கள் என்று சாட்சி சொல்கிறார். தாவாச் சொத்தை நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு எங்கு குடியிருந்தேன் என்றால் கழுதியில் குடியிருந்தேன் என்கிறார் சாட்சி. தாவாச் சொத்தை கிரையம் வாங்கி வீடு கட்டிய பின்புதான் எனக்கு அந்த கிராமத்தில் பழக்க வழக்கங்கள் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவாச் சொத்து எப்படி இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் காலியிடமாக இருந்தது என்கிறார் சாட்சி. தாவாச் சொத்தில் தெருவே கிடையாது என்றும், தெருவை உருவாக்குவதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் போட்டுள்ள வழக்குசட்டப்படி செல்லாது என்றும், பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை- இல்லை